

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.9.2024) முகாம் அலுவலகத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.9.2024) முகாம் அலுவலகத்தில், பால்வளத் துறை அமைச்சர்.ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.9.2024) முகாம் அலுவலகத்தில், அமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ள .வி.செந்தில் பாலாஜி சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.



முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களை நேற்று (29.9.2024) முகாம் அலுவலகத்தில், புதிய அமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ள ஆர்.இராஜேந்திரன் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வ கணபதி , சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களை நேற்று (29.9.2024) முகாம் அலுவலகத்தில், புதிய அமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ள முனைவர் கோவி.செழியன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் சு.கல்யாண சுந்தரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் மற்றும் கழக நிரிவாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.9.2024) முகாம் அலுவலகத்தில், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.

### சிறந்த பாரம்பரிய சுற்றுலாத் தளமாக கீழடி தேர்வு! ஒன்றிய அரசு அறிவிப்பு!

# உலகெங்கும் வாழும் தமிழர்களே கீழடிக்கு வருக; நம் வரலாற்றைப் பருக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, செப்.30 -**

**ஒன்றிய அரசின் சுற்றுலாத் துறை சார்பில் சிறந்த பாரம்பரிய சுற்றுலா தளமாக கீழடி தேர்வு செய்யப்பட்டுள்ளது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில், "உலகெங்கும் வாழும் தமிழர்களே, கீழடிக்கு வருக, நம் வரலாற்றைப் பருக!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு :

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையால் கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட மாதிரிகளின் அறிவியல் காலக்கணிப்பு கி.மு.ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வைகை ஆற்றங்கரையில் நகரமயமாக்கல் இருந்ததையும், கங்கைச் சமவெளியின் நகரமயமாக்கலுக்கு சமகாலமானது என்பதையும் உறுதிபடுத்தியுள்ளது. கி.மு.ஆறாம் நூற்றாண்டில் தமிழ்ச் சமூகம் கல்வியறிவும் எழுத்தறிவும் பெற்றிருந்தனர் என்பதை அறிவியல் அடிப்படையில் நிலை நிறுத்தியுள்ளது.

தமிழர்களின் தொன்மை, பண்பாடு, நாகரிகம், கல்வியறிவு, எழுத்தறிவு, உலகின் பல்வேறு பகுதியுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பு ஆகியவற்றினை பறைசாற்றும் விதத்திலும், அதனை உலகிற்கு வெளிக்கொணரும் வகையிலும், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை உலகத் தமிழர்கள் மற்றும் பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் 31,000 சதுர அடி பரப்பளவில் 18.43 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட கீழடி அருங்காட்சியகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 5.3.2023 அன்று திறந்து வைத்தார்.

இந்த அருங்காட்சியகத்தில், மதுரையும் கீழடியும், வேளாண்மையும் நீர் மேலாண்மையும், கலம் செய்கோ, ஆடையும் அணிகலன்களும், கடல் வழி வணிகம், வாழ்வியல் எனும் ஆறு பொருண்மைகள் அடிப்படையில் தனித்தனி கட்டடங்களில் தொல்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், பழந்தமிழ் சமூகத்தின் முற்போக்கு சிந்தனைகள் பொருந்திய சுமார் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொல் பொருட்கள் கீழடி அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த அருங்காட்சியகத்தை உள்ளம் குளிர கண்டு களிக்கின்றனர்.

தற்போது, ஒன்றிய அரசின் சுற்றுலாத்துறை சார்பில், சுற்றுலா தினத்தில் வழங்கப்படும் 'சிறந்த பாரம்பரிய சுற்றுலா தளமாக' கீழடி தேர்வு செய்யப்பட்டுள்ளது தமிழர்கள் அனைவருக்கும் பெருமைக்குரிய செய்தியாகும்.

ஒன்றிய அரசின் சுற்றுலாத் துறையால் 'சிறந்த பாரம்பரிய சுற்றுலா தளமாக' கீழடி தேர்வு செய்யப்பட்டுள்ளது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் "உலகெங்கும் வாழும் தமிழர்களே... கீழடிக்கு வருக... நம் வரலாற்றைப் பருக...!" என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.09.2024) காஞ்சிபுரத்தில் நடைபெற்ற கழகத்தின் 75ஆம் ஆண்டு பவள விழா பொதுக் கூட்டத்தில், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு நினைவுப் பரிசினை – விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் அவர்களுக்கு வழங்கினார்.

### இந்திய கார்ப்பரேட் உலகின் மதிப்புமிகு தலைவர்களில் ஒருவராக

# டாடா குழுமத் தலைவர் சந்திரசேகர் விளங்குகிறார் - வாழ்த்து!

### டாடா குழுமத் தலைவருடனான சந்திப்பு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, செப்.30-**

**இராணிப்பேட்டை மாவட்டம். சிப்காட்டில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் புதிய உற்பத்தித் தொழிற்சாலை அடிக்கல் நாட்டு விழாவை முன்னிட்டு, டாடா குழுமத்தின் தலைவர் சந்திரசேகரன் அவர்களை சந்தித்துப் பேசியது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-**

இராணிப்பேட்டை மாவட்டம். சிப்காட்டில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் புதிய உற்பத்தித் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டும் விழாவை முன்னிட்டு, டாடா குழுமத்தின் மரியாதைக்குரிய தலைவர் சந்திரசேகரன் அவர்களை இன்று விருந்தோம்பும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றேன்.

எளிமையான பின்புலத்தில் இருந்து உயர்ந்த அவர் இந்திய கார்ப்பரேட் உலகின் மதிப்புமிகு தலைவர்களில் ஒருவராக ஏற்றம் அடைந்து பலருக்கும் ஊக்கமாக விளங்கி வருகிறார். அவரது தலைமையின்கீழ்,குறிப்பிடத்தக்கவளர்ச்சியையும் பெருமாற்றத்தையும் டாடா குழுமம் அடைந்துள்ளது.

பயனுள்ள ஆலோசனைகளை நாங்கள் மேற்கொண்ட இச்சந்திப்பின்போது, டாடா குழுமம் தமிழ்நாட்டில் மேலும் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அன்போடு கோரிக்கை விடுத்தேன்.

திரு. சந்திரசேகரன் அவர்கள், கடந்த மூன்று ஆண்டுகளில், டாடா குழுமம் தமிழ்நாட்டில் தங்களது திட்டங்களைப் பெருமளவில் விரிவாக்கம் செய்ததைக் குறிப்பிட்டுப் பேசியதையும், நமதுதிராவிடமாடல்அரசின்வேகத்தையும்,எளிதில்



அணுகக் கூடிய தன்மையையும், விரைவான இயக்கத்தையும் அங்கீகரித்ததையும் நான் மிகவும் பாராட்டுகிறேன்.

நாங்கள் தொடர்ந்து இதேபோல டாடா குழும நிறுவனங்களின் தேவைகளுக்கு உடனடியாக, முழுமையாகச் செவி மடுப்பதோடு, எங்கள் இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு எல்லா வழியிலும் வேலைவாய்ப்புகளை உருவாக்க இணைந்து பணிபுரிவோம் என அவருக்கு நான் உறுதியளிக்கிறேன். இன்று தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் வெற்றி யடைய எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக அவர் தொடர்ந்து அளித்து வரும் ஆதரவுக்காக எனது நன்றியையும் உரித்தாக்குகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.